

வேலூர் மாவட்டம் – காட்பாடி ஊராட்சி ஒன்றியம் எருக்கம்பட்டு கிராமத்தில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.31.46 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய ஊராட்சி மன்ற அலுவலக கட்டிடத்தை நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் திறந்து வைத்தார். நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் வே.இரா. சுப்புலட்சுமி, ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் வேல்முருகன், மாநகராட்சி துணை மேயர் எம்.சுனில்குமார், ஒன்றியக் குழு துணைத் தலைவர் சரவணன், ஒன்றியக் குழு உறுப்பினர் சி.ரவி, ஊராட்சி மன்றத் தலைவர் கோமதி சுதாகர், ஒன்றியக் கழகச் செயலாளர் சி.ரவி,கே.கருணாகரன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தஞ்சாவூர் மாவட்டம் திருவிடைமருதூர் ஒன்றியம் சாரதா மஹாலில் கூட்டுறவுத்துறை சார்பில் நடைபெற்ற தாட்கோ மானியம் மற்றும் கூட்டுறவு கடன் வழங்கும் விழாவில் உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை தஞ்சாவூர் மாவட்ட மகளிர் அதிகார மையம் மூலம் பெண் குழந்தைகளை காப்போம் மற்றும் பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் என்னும் விழிப்புணர்வு வாகனத்தை கொடியசைத்து துவக்கி வைத்தார். மாவட்ட ஆட்சித்தலைவர் பா.பிரியங்கா பங்கஜம், மாநிலங்களவை உறுப்பினர் சு.கல்யாண சுந்தரம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம்,கும்பகோணம் சார் ஆட்சியர் செல்வி ஹிருத்யா எஸ்.விஜயன், மாவட்ட ஊராட்சித் தலைவர் உஷாபுண்ணியமூர்த்தி மற்றும் பலர் உடன் உள்ளனர்.

### செஞ்சி ஒன்றியம் கணக்கன் குப்பம் ஊராட்சியில்

# ரூ.13.16லட்சம் மதிப்பீட்டில் புதிய ரேஷன் கடை!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்!

செஞ்சி அக். 22-

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் கணக்கன் குப்பம் ஊராட்சியில்புதிய ரேஷன் கடை கட்டி கொடுக்க வேண்டுமெனபொதுமக்கள் அரசுக்கு கோரிக்கை வைத்ததையடுத்து செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 13.16லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய ரேஷன் கடை கட்டப்பட்டு அதன் திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார். ஊராட்சி மன்ற தலைவர் சுலோச்சனா ஜெயபால் முன்னிலை வகித்தார். கணக்கன்குப்பம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க செயலாளர் கார்த்திகேயன் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு புதிதாக கட்டப்பட்ட ரேஷன் கடையை மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து குடும்ப அட்டை தாரர்களுக்கு ரேஷன் பொருட்களை வழங்கி சிறப்புரை ஆற்றினார்.

நிகழ்ச்சியில் செஞ்சி ஒன்றிய துணைச் சேர்மன் ஜெயபாலன், செஞ்சிமத்திய ஒன்றிய செயலாளர் விஜயராகவன், மேற்கு ஒன்றிய செயலாளர் பச்சையப்பன்,மாவட்ட கவுன்சிலர்கள் அரங்க ஏழுமலை, அகிலா பார்த்திபன், ஒன்றிய கவுன்சிலர்கள் கேமல் ,சத்யா கார்த்திகேயன்,முன்னாள் கவுன்சிலர் தங்கதுரை, ஊராட்சி மன்ற தலைவர்கள் மகேஸ்வரி பொற்செழியன், தாட்சாயினி கார்த்திகேயன், ஒன்றிய நிர்வாகிகள் வாசு, செல்வமணி,அய்யாதுரை,நிர்வாகிகள் ரமேஷ், கணேசன் ,சுரேஷ், கோபால், மகளிர் அணி கலா, உள்ளிட்டோர்கலந்து கொண்டனர்.விற்பனையாளர் பரசுராமன் நன்றி கூறினார்.

### திருப்பூரில் 47 தொழில் முனைவோர்களுக்கு

# ரூ.111.82 கோடி மதிப்பீட்டில் பல்வேறு கடன் ஒப்புதல் ஆணைகள்!

## அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன் - என்.கயல்விழி செல்வராஜ் வழங்கினர்!

திருப்பூர், அக். 22 -

சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில்கள் துவங்குதல் மற்றும் மேம்பாட்டுக்கான சிறப்பு கடன் வசதியாக்கல் முகாமில் 47 தொழில் முனைவோர்களுக்கு ரூ.111.82 கோடி மதிப்பீட்டில் பல்வேறு கடன் ஒப்புதல் ஆணைகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன், மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் வழங்கினர்.

திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் 18.10.2024 - வெள்ளிக்கிழமை அன்று மாவட்ட தொழில் மையம் சார்பில் சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில்கள் துவங்குதல் மற்றும் மேம்பாட்டுக்கான சிறப்பு கடன் வசதியாக்கல் முகாமில் மாவட்ட ஆட்சியர் தா.கிறிஸ்துராஜ் முன்னிலையில் மாவட்ட தொழில் மையம் சார்பில் அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம் மூலம் 04 பயனாளிகளுக்கு ரூ.26.00 இலட்சம் மதிப்பீட்டிலும்,

புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் மூலம் 08 பயனாளிகளுக்கு ரூ.3.81 கோடி மதிப்பீட்டிலும்,

வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் கீழ் 11 பயனாளிகளுக்கு ரூ.66.00 இலட்சம் மதிப்பீட்டிலும், பிரதமரின் வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் கீழ் 01 பயனாளிக்கு ரூ.18.00 இலட்சம் மதிப்பீட்டிலும்,

பாரத பிரதமர் உணவு பதப்படுத்தும் குறு நிறுவனங்களுக்கான திட்டத்தின் கீழ் 02 பயனாளிகளுக்கு ரூ.10.70 இலட்சம் மதிப்பீட்டிலும் என 26 நபர்களுக்கு ரூ.16.58 கோடி மதிப்பீட்டிலும்,

பல்வேறு வங்கிகளின் மூலம் 21 பயனாளிகளுக்கு ரூ.95.24 கோடி மதிப்பீட்டில் பல்வேறு தொழில் தொடங்குவதற்கான கடன் ஒப்புதல் ஆணைகள் என மொத்தம் 47 தொழில் முனைவோர்களுக்கு ரூ. 111.82 கோடி மதிப்பிலான கடன் ஒப்புதல் ஆணைகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் மு.பெ. சாமிநாதன், மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் வழங்கினர். இந்நிகழ்ச்சியில் மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் பா.கார்த்திகை வாசன், • FameTN முதுநிலை ஆலோசகர் ஜே.வணங்காமுடி, மாவட்ட தொழில் மைய உதவி இயக்குநர் (தொழில் நுட்பம்) கோ.கீரீசன், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் எஸ்.துர்கா பிரசாத், சிட்பி துணை பொது மேலாளர் ராமச்சந்திரன், துணிநூல் துறை துணை இயக்குநர் எஸ்.ராகவன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான ‘திராவிட மாடல்’ ஆட்சியில்

# கரூர் மாவட்டத்திற்கு ஐ.டி. பார்க் - ரூ.3 ஆயிரம் கோடியில் திட்டங்கள்!

## வேலைவாய்ப்பு முகாமில் அமைச்சர் வி.செந்தில்பாலாஜி பேச்சு!

கரூர், அக். 22-

கரூர் மாவட்டத்திற்கு ஐ.டி. பார்க் உள்பட 3 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களை முதலமைச்சர் மு. க.ஸ்டாலின் அவர்கள் வழங்கி உள்ளார்கள். அதற்காக கோடான கோடி நன்றியை தெரிவிப்பதாக தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் பணி நியமன ஆணைகளை வழங்கி அமைச்சர் வி.செந்தில் பாலாஜி பேசினார்.

கரூர் தாந்தோணி அரசு கலைக்கல்லூரியில் 150க்கும் மேற்பட்ட தனியார் துறை நிறுவனங்கள் கலந்து கொண்ட மாபெரும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் நடைபெற்றது. இம் முகாமில் மின்சாரம். மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி. செந்தில்பாலாஜி கலந்து கொண்டு தேர்வானவர்களுக்கு பணிநியமன உத்தரவுகளை வழங்கினார்.

இந்நிகழ்சிக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் மீ. தங்கவேல், கரூர் நாடாளுமன்ற உறுப்பினர் செ.ஜோதிமணி, சட்டமன்ற உறுப்பினர்கள் இரா.மாணிக்கம் (குளித்தலை). ஆர். இளங்கோ (அரவக்குறிச்சி), க. சிவகாமசுந்தரி (கிருஷ்ணராயபுரம்), கரூர் மாநகராட்சி மேயர் வெ.கவிதா கணேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி.செந்தில்



பாலாஜி பேசியதாவது:-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உத்தரவுப்படியும். துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழிகாட்டுதல்படி, கரூர் மாவட்ட நிர்வாகம், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டு மையம். தமிழ்நாடு மாநில ஊரக நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் இணைந்து நடத்தும் மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் நடைபெற்று வருகிறது. இந்த தனியார் துறை வேலை வாய்ப்பு முகாமில் 150க்கும் மேற்பட்ட தனியார் துறை நிறுவனங்கள் கலந்து கொண்டு தங்கள் நிறுவனங்களுக்குத் தேவையான நபர்களை வேலைக்குத் தேர்ந்தெடுத்து உள்ளார்கள்.

**5071 நபர்கள் தேர்வு!**

மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தி அதன் மூலம் பணி ஆணைகளை பெறுபவர்களின் முகத்தில் உள்ள மகிழ்ச்சியைப் பார்க்கும் போது முதலமைச்சர் அவர்களின் உத்தரவுப்படி நடைபெற்ற இந்த முகாமின் வெற்றியாகும். கரூர் மாவட்டத்தை பொருத்தவரை இதுவரை 7 தனியார் நிறுவனங்க ளின் வேலை வாய்ப்பு முகாம்களும், சிறிய அளவிலான 53 வேலைவாய்ப்பு முகாம்களும் என மொத்தம் 60 முகாம்கள் நடத்தப்பட்டு அதில் 1425 தனியார் நிறுவனங்கள் பங்கு பெற்று உள்ளது. இதன் மூலம் 5071 நபர்கள் தேர்வு செய்யப்பட்டு 420 தொழில் நிறுவனங்களில் பணி புரியும் வாய்ப்பை பெற்றுள்ளார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வெளிநாடுகளில் முதலீடுகளை ஈர்த்து அதன் மூலம் பல்வேறு தொழிற்சாலைகளை உருவாக்கி இலட்சக்கணக்கான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் வகையில் ஆட்சிப் பொறுப்பேற்ற நாள் முதல் செயல்பட்டு கொண்டிருக்கிறார்கள்.

ஆட்சிப் பொறுப்பேற்ற நாள் முதல் மக்களை தேடி மருத்துவம், நம்மை காக்கும் 48. இல்லம் தேடி கல்வி, புதுமைப்பெண் திட்டம், தமிழ் புதல்வன் திட்டம் போன்ற எண்ணற்ற திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். ஆட்சி பொறுப்பு ஏற்ற 3 ஆண்டுகளுக்குள் 2 லட்சம் விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்பு வழங்கி இலவச மின் இணைப்புக்காக பதிவு செய்து வாழ்நாளில் தங்களுக்கு இலவச மின் இணைப்பு கிடைக்காதா என்று ஏக்கத்தில் இருந்தவர்களுக்கு மின் இணைப்புகளை வழங்கி பெருமை சேர்த்து உள்ளார்கள்.

கரூர் மாவட்டம் 4 சட்டமன்றத் தொகுதிகளை கொண்ட சிறிய மாவட்டமாக இருந்தாலும் கூட ஆட்சி பொறுப்பேற்ற முதல் ஆண்டிலேயே அரசு வேளாண்மை கல்லூரி தொடங்கி மாணவர் சேர்க்கையும் தொடங்கி தொடர்ந்து கல்வி பெற்று வருகிறார்கள். அரவக்குறிச்சிக்கு ஒரு அரசு கலைக் கல்லூரி என எண்ணற்ற பல திட்டங்களை முதலமைச்சர் அவர்கள் கரூர் மாவட்டத்திற்கு வழங்கி வருகிறார்கள்.

**முதல்வருக்கு கோடான கோடி நன்றி!**

கரூர் மாவட்டத்திற்கு ஒரு ஐ.டி பார்க் வேண்டுமென்று முதலமைச்சர். துணை முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்ற போது கரூர் மாவட்டத்திற்கு அத்தகைய சிறப்பு திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் வழங்கியமைக்காக கரூர் மாவட்ட பொதுமக்களின் சார்பாக கோடான கோடி நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன். ஏறத்தாழ ரூ. 3 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களை கரூர் மாவட்டத்திற்கு முதலமைச்சர் அவர்கள் வழங்கி உள்ளார்கள். அவர்கள் அறிவிக்கக்கூடிய திட்டங்களை விரைவாக செயல்படுத்த கூடிய வகையில் துணை முதலமைச்சர் அவர்கள் மாவட்டம் தோறும் ஆய்வுக் கூட்டங்களை நடத்தி பல்வேறு வளர்ச்சி திட்டங்களை விரைவாக முடிக்க உத்தரவுகளை வழங்கி உள்ளார்கள்.

இங்கு வந்துள்ள பெரியோர்கள் இளைஞர்கள், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சாதனைத் திட்டங்களை பெற்றிடும் வகையில் என்றும் அவர்களுக்கு உறுதுணையாக இருந்திட வேண்டும் என்றும் அன்போடு கேட்டுக் கொண்டு, இந்த சிறப்பு வாய்ந்த வேலை வாய்ப்பு முகாமில் பங்கு பெற்று மாவட்ட ஆட்சித்தலைவரோடு இணைந்து எழுச்சியோடு பணியாற்றிக் கொண்டிருக்கும் அலுவலர்கள் அனைவருக்கும் பாராட்டுகளையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் .ம.கண்ணன், துணை மேயர் தாரணி பசரவணன், மாநகராட்சி ஆணையர் சுதா, மாநகராட்சி மண்டல குழு தலைவர் எஸ்.பி.கனகராஜ், கோல்டுஸ்பாட் ஆர். எஸ்.ராஜா, அன்பரசு, சக்திவேல், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க திட்ட இயக்குனர் வி. பாபு, 44 ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் எஸ். மோகன்ராஜ் தான்தோன்றி மலை அரசு கலைக் கல்லூரி முதல்வர் அலெக்சாண்டர். தாந்தோணி ஊராட்சி ஒன்றியக் குழு தலைவர் சிவகாமி. குளித்தலை நகர்மன்ற தலைவர் சகுந்தலாபல்லிராஜா, பள்ளப்பட்டி நகர்மன்ற தலைவர் .முனைவர்ஜான், வேலைவாய்ப்புத்துறை மண்டல இணை இயக்குனர் கோவை ஆ.ஜோதிமணி மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர் டி. ஜோதி ஆகியோர் கலந்து கொண்டனர்.



துணை முதல்வராக பொறுப்பேற்ற பின்பு திண்டுக்கல் மாவட்டத்திற்கு வரும் இளைஞர்களின் எழுச்சி நாயகன் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு சிறப்பான முறையில் வரவேற்பு கொடுக்க வேண்டும் என்று கிழக்கு மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனை கூட்டத்தில் மாவட்ட செயலாளர் ஐ.பி.செந்தில்குமார் எம்.எல்.ஏ. பேசினார். அருகில் கிழக்கு மாவட்ட அவைத்தலைவர் வழக்கறிஞர் காமாட்சி,துணை செயலாளர்கள் ஆ.நாகராஜன், பிலால்உசேன், மார்க்கிரேட் மேரி உட்பட திமுக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

### முதல்வர் - துணை முதல்வருக்கு நன்றி! இராமநாதபுரம்

# அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிறப்பு சிகிச்சை தொடக்கம்!

## மாவட்டச் செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. அறிக்கை!

இராமநாதபுரம், அக்.21-

இராமநாதபுரம் இராமநாதபுரம் மாவட்ட கழக செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் அறிக்கை வருமாறு :

இராமநாதபுரத்தில் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை உள்ளது.இங்கு விபத்து மற்றும் அவசர சிகிச்சை,இதய நோய், எலும்பு முறிவு,நரம்பியல், ,மகப்பேறு மற்றும் குழந்



தைகள் நலம் என பல்வேறு பிரிவில் சிறப்பான மருத்துவ சிகிச்சை அளித்து வருகின்றார்கள்.தலையில் ஏற்படும் காயங்களுக்கு அறுவை சிகிச்சை செய்திட அனுபவமுள்ள மருத்துவர்கள் தேவை என்பதை சட்டமன்றத்தில் முதல்வர் அவர்களிடமும் , துணை முதல்வர் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களிடம் இராமநாதபுரம் மாவட்ட மக்களின் சார்பாக கொடுக்கப்பட்ட கோரிக்கை மனுவின் அடிப்படையில் மூளை நரம்பியல் அறுவை சிகிச்சைக்கு என டாக்டர் பரணிதரன் என்ற சிறப்பு நிபுணரை நியமித்து தமிழக அரசின் சுகாதாரத் துறை உத்தரிட்டுள்ளது. இதன் மூலம் இளையான்குடி அருகே ஆளிமதுரை கிராமத்தைச் சேர்ந்த மூக்கையா மகன் தனசேகரன் இவர் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் உடற்கல்வி இயல் இறுதி ஆண்டு மாணவர்.இவருக்கு ஏற்பட்ட தலை காயத்தை மூன்று மணி நேரம் அறுவை சிகிச்சை செய்து அவரது உயிரை காப்பாற்றியுள்ளனர்.

இனிமேல் தலையில் ஏதேனும் காயம் ஏற்பட்டால் இராமநாதபுரம் மருத்துவ கல்லூரி மருத்துவமனையிலேயே அறுவை சிகிச்சை செய்திட அனைத்து வசதிகளும் செய்து தரப்படும் இதன் மூலம் இராமநாதபுரம் மாவட்ட மக்களின் சார்பாக தமிழ்நாடு முதல்வர் மு. க. ஸ்டாலின் அவர்களுக்கும், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியம் அவர்களுக்கும் இராமநாதபுரம் மாவட்ட மக்களின் சார்பில் நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன்.

இவ்வாறு காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



திருப்பத்தூர் மாவட்டம், ஆம்பூர் அடுத்த கிரிசமுத்திரம் அரசினர் மேல்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவ–மாணவிகளுக்கு ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் அ.செ.வில்வநாதன் தலைமையில், மாவட்ட கழக செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. மிதிவண்டிகளை வழங்கினார். இதில் ஒன்றிய குழு தலைவர் சங்கீதா பாரி, ஊராட்சி மன்ற தலைவர் கண்ணன், பொதுக்குழு உறுப்பினர் பெருமாள், ஒன்றிய அவைத் தலைவர் ராமநாதன், மாவட்ட பிரதிநிதி சிவகுமார், ஒன்றிய பொருளாளர் தசரதன் ஒன்றிய துணை செயலாளர் கள்குமார், பொன்னம்பலம், வெங்கடேசன், ஒன்றிய குழு உறுப்பினர் டி. மேல் குப்பம் ஊராட்சி மன்ற தலைவர் குமார், ஒன்றிய துணை செயலாளர் சங்கர் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.